பொது சன நூலகம்
26 JUN 2000
யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 12 திங்கட்கிழமை (26 06 2000) VALAMPURI ஒலி 189

★ இனப்பிரச்சினைக்கு

# ராணுவத்தீர்வே முடிவு; புலிகளுக்கு எதிரான போரைத்தீவிரப்படுத்தவும்!

## ஜனாதிபதிக்கு 4 மகாநாயக்கர்கள் மகஜர்

(கொழும்பு விசேட நிருபர்)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு இராணுவத் தீர்வை வலியுறுத்தியும், விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தைத் தீவிரப் படுத்துமாறு கோரியும் பௌத்த மதத்தைச் சேர்ந்த நான்கு மகா நாயக்க தேரர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமார துங்காவிற்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளார்கள்.

மல்வத்த பீடத்தைச் சேர்ந்த ரபுக்கல சிறியபசி தேரர், ... படிசரங்க நாயக்க தேரர், அஸ்கிரிய பீடத்தின் உடுகம சிறிதர்ம சரத்த தேரர், ராமஞ்ஞ நிகாயாவின் விவறுதெனிய மொடாசார தேரர் ஆகியோர் இம்மகஜரில் ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நோர்வேயின் உதவியோடு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை கைவிட்டு புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தீவிரமாக வழிநடத்தச் செல்லவும்.

இந்த நாட்டில் இருப்பது தீவிரவாதமே தவிர இனப் பிரச்சினை அல்ல இதனை முடிவிற்குக் கொண்டு வரக் கூடிய ஒரே வழி தீவிரவாதத்தை ஒழிப்பதே ஆகும்.

விடுதலைப் புலிகளுக்கு ஆரம்பம் முதல் ஆதரவு வழங்கி வரும் நோர்வேயின் ஆதரவுடன் பேச்சுவார்த்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணிகளுக்கு இன்றும் நாளையும் பயணச்சீட்டுக்கள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து திருமலை புறப்படவுள்ள "சிற்றி ஒவ் றிங்கோ" பயணிகள் கப்பலில் செல்ல விருப்போருக்கு இன்றும் நாளையும் பயணச்சீட்டுக்கள் வழங்கப்படும் என்று சிவில் நிர்வாககாரியாலயம் அறிவித்துள்ளது.

இப்பயணச் சீட்டு வழங்கலில் கடந்த கப்பலில் பயணம் செய்யமுடியாமல் திரும்பிய பல்கலைக்கழக மாணவர்களுடன் 83 பல்கலை மாணவர்களும், வெளிநாட்டிலிருந்து வந்து திரும்புபவர்களும், இருவழிப்பயணச் சீட்டு வைத்திருப்பவர்களும், அரச உத்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையிலிருந்து 27 தமிழ் அகதிகள் நேற்று தமிழகம் சென்றனர்

(சென்னை)

இலங்கையிலிருந்து 27 தமிழ் அகதிகள் நேற்று தமிழகம் வந்துள்ளதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

ஆறு குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் இரண்டு படகுகள் மூலம் தனுஷ்கோடியை வந்தடைந்துள்ளதாகவும் வந்தவர்களில் ஒருவருக்கு கையில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் இருந்தமையால் வைத்தியசாலை ஒன்றில அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு அறிவித்தல்

யாழ். பிரதேச செயலர் பிரிவில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் காலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும். (ச)

### செஞ்சிலுவை கப்பல வருகிறது

(திருகோணமலை)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் கப்பலான "யாவாக்கால்" இன்று திருமலையிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறையை வந்தடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4)

இனப்பிரச்சினைத் தீர்வில்

## இலங்கைஅரசு எடுக்கும் இராணுவத் தீர்வை இந்தியா எதிர்க்கும்!

(சென்னை)

இலங்கையில் நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தியா மனப்பூர்வமான ஆதரவை வழங்குமென வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கை அரசு எடுக்கும் எத்

### ஜஸ்வந்சிங்

தகையஇராணுவத்தீர்வையும் இந்தியா எதிர்க்கும் இது தொடர்பாக அண்மையில் கொழும்பு சென்றிருந்த சமயம் ஜனாதிபதி சந்திரிகாவுடனும், வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடனும் விரிவாக பேச்சு நடத்தியுள்ளேன்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சுற்றிவளைப்பு

வவுனியா, பூந்தோட்டப் பகுதி விசேட அதிரடிப்படையினரால் திடீரென சுற்றிவளைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று மாலை நடைபெற்ற இச் சுற்றிவளைப்பின்போது விசேட அதிரடிப்படையினர் வீடு வீடாகச்சென்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் வீதியில் சென்றவர்களும தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சுற்றிவளைப்பின்போது இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## இடம்பெயர்ந்த மக்கள் வீடுகளுக்கு சென்று வர புதிய நடைமுறை!

(யாழ்ப்பாணம்)

அரியாலை, பாஷையூர், கொழும்புத்துறை போன்ற பகுதிகளில் இருந்து தமது உடமைகளை எடுக்காத இடம்பெயர்ந்த மக்கள் தங்களது உடமைகளை எடுத்து வரவும், மீண்டும் குடியேறவும் அனுமதிப்பதற்கான புதிய நடைமுறை ஒன்று கடைப்பிடிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக 512 வது படையணியின் அதிகாரி ஒருவரை புளொட் அமைப்பின் தூதுக்குழு ஒன்று நேற்று சந்தித்த போது புதிய நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

(வவுனியா)

தொடரும் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின் போதும், வெவ்வேறு சம்பவங்களின் போதும் உயிரிழந்த தமது உறுப்பினர்களின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு-

★ வீரவேல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ தற்கொலைக்குண்டுத் தாக்குதலில் இருந்து

## கொழும்பு நகரை பாதுகாப்பதற்கு சோதனை நடவடிக்கைகள் தீவிரம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவியுள்ளனர் என்ற சந்தேகத்தின் பேரில் நகரின் சோதனை பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு நகரவீதிகளில் சோதனைச் சாவடிகள் அமைத்து சோதனை நடத்தி வந்த இராணுவத்தினரும், பொலிசாரும், தற்போது திடீர்திடீரென மோட்டார் சைக்கிள்களிலும், வாகனங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்க்கும் நடவடிக்கை ஒன்று இன்று முதல் அடுத்த மாதம் 12ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை சகல மாவட்ட செயலகங்களிலும், பிரதேச செயலகங்களிலும், இராணுவ முகாங்களிலும் நடைபெறவுள்ளது. (வ)

## கொழும்பில் வீடு வீடாக சோதனை 61 தமிழ் இளைஞர் யுவதிகள் கைது!

(கொழும்பு)

கொழும்பும் அதனை அண்டிய பகுதிகளிலும் இராணுவத்தினரும், பொலிசாரும் இணைந்து வீடு வீடாகத் தேடுதல் நடத்தினர்.

இத் தேடுதல் நேற்று முன்தினம் இரவு 11 மணி முதல நேற்றுக் காலை 6 மணி வரை நடாத்தப்பட்டது.

வத்தளை, கெந்தல, உணுப்பிட்டி ஆகிய பகுதிகளிலேயே இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இத்தேடுதலின் போது கைது செய்யப்பட்ட 61 தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் வத்தளைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### ஆங்கிலம்

O/L 2000-ம் ஆண்டு எடுக்கும் மாணவர்களுக்கும், மற்றும் கீழ்வகுப்புகளுக்கும், வீட்டுக்கு வந்து ஆங்கிலம் கற்பித்துக் கொடுக்கப்படும்.

யாழ். நகர், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில, கோண்டாவில் உட்பட்ட இடங்கள் விரும்பத்தக்கது. உடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

இல. 102, C/o வலம்புரி.

(1067)

### தாதிகள் தேவை

வைத்தியசாலையில் பணிபுரிவதற்கு பெண்கள் தேவை Dr. க. சிவனடியான், நவாலி மானிப்பாய். (1227)

### திருமண சேவை

சிறு இடைவெளிக்குப் பின் மீண்டும் துரிதமாக 3-ம் கட்டையடி வாசிகசாலை ஒழுங்கை கல்வியங்காட்டில் திருமண சேவை நடைபெறுகிறதென்பதை என்னுடன் தொடர்பு கொண்டவர்களுக்கும் புதியவர்களுக்கும்அறியத் தருகிறேன். கு. திருவிளங்கம்

(1266)

### விற்பனைக்கு

அலுமாரிகள், பெட்டகங்கள், செற்றி செற், கட்டில்கள், மேசைகள், வீட்டுப்பாவனைக்குரிய வேறு பொருட்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: க. நடராசா பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய். (1264)

20 அடி புதிய தகரப் பந்தல் விற்பனைக்குண்டு.மாருதி தளபாட நிலையம், பன்றிக் கோட்டுபிள்ளையார்கோவில் முன்பாக 618, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.

(1233)

### பொருளியல்

1999 - ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதாரக் குறிகாட்டிகள் அடங்கிய அபிவிருத்திக் கொள்கை, பணம, சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்று வீதம் மற்றும் நூல்கள் யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகத்திலுள்ள பிரபல்ய புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே. கருணாகரன்.

(1240)

### புலமைப்பரிசில்

நேற்று (ஞாயிறு) நடைபெற்ற பயிற்சி வினாத்தாள்களை விடைகளுடன்பெற்றுக் கொள்ளலாம். அடுத்தபயிற்சி வினாத்தாள் புதன் வெளியாகும். BOND யாழ் நகர்.

(1263)

### ஒப்படைக்கவும்

ஸ்ரீபன் சந்திரபோஸ் என்பவருடைய கடற்படையினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இல. 10368 பாடசாலை அடையாள அட்டை மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் தவறவிடப்பட்டு பங்குத் தந்தையிடம் இருந்து எவரோ பெற்றுக் கொண்டார்கள் எனவேபெற்றுக்கொண்டவர்கள்பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கும்படி தயவாக கேட்டுக்கொள்ளுகிறேன். முகவரி: செபஸ்தி பற்றிமா மனோகரன் பற்றிமா கோவிலடி, பண்டத்தரிப்பு.

(1269)

### விற்பனைக்குண்டு

மரத்தளபாடங்கள், USHA FRIDGE, SINGER தையல் மெஷின FLOOR POLISHER, ORGAN 2 ½ H.P டைனமோ விற்பனைக்குண்டு தொடர்பு. 39/1 இராசாவின் தோட்டம் றோட் (வைரவர்கோவில் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.

[கி573]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் குகதாசன் சிறீதரன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30-10.1967 | 29-06-1997 |

திதி
26-06-2000

மூத்தண்ணா!
குடும்பத்தின் தலைமகன் நீ
குலம் விளங்க வந்தவன் நீ
குவலயத்தில் சிறீதரன் நீ
குறைவயதில் ஏன் பிரிந்தாய்?
குறை என்ன கண்டாயோ?

உன் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்.

முதலியார் வளவு,
இமையாணன்
உடுப்பிட்டி.

[1226]

## கலந்துரையாடல்

(யாழப்பாணம்)

முறைசாரா கல்விப்பயிற்சி நெறிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய் காலை10 மணிக்கு யாழப்பாணம வலயக்கல்விப் பணிமனையில இடம் பெறவுள்ளதாக மேறபடிவலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கீழ் வரும் பாடசாலையில் கல்வி கறகும் அதிபர்கள், ஆசிரியர் யாவரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

யாழ்.நாயன்மார் கட்டு மகேஸவரி வித்தியாலயம், கொழுமபுத்துறை இ.ம.வி. யாழ்.செ சாள்ஸ் ம.வித்தியாலயம், நாவாந்துறை றோ, க.வி, யாழ். இளையதம்பி இ.வி, உயரபபுலம மெ.மி.த.கலவன் பாடசாலை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில இந்துக்கல்லூரி, யாழ். சன்மார்க்க வித்தியாலயம், கோண்டாவில இ.ம.வி, நல்லூர் ஞானோதய வித்தியாலயம்.

[க-14]

### கோரிக்கை

[யாழ்பபாணம்]

50, றக்கா வீதியில் அமைந்துள்ள யாழ்.பிரதேச செயலக தையல பயிற்சி நிலையத்தின் கீழ் மாடியில் குடியிருக்கும குடியிருப்பாளரை வேலை நாடகளில் தவறாது தம்மைச் சந்திககும்படி பிரதேச செயலாளா கேட்டுக் கொண்டுள்ளார். [சி]

### இடம்பெயர்ந்த மக்கள் அவதி

(சுன்னாகம்)

மயிலிட்டியில இருந்து இடமபெயர்ந்து சுன்னாகம சபாபதிப்பிள்ளை வீதியில் வசித்துவரும மக்கள அடிப்படை வசதிகள் இன்றி அல்லற்படுவதாகத் தெரியவருகிறது.

மலசலகூட வசதி, நீர்வசதி என்பன போதியளவில் இன்மையால் அப்பகுதியில் தொற்றுநோயகள் ஏற்படும் அபாயம ஏற்பட்டிருப்பதாகவும் சம்பந்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர்.

(உ)

### பஸ் சேவை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் தற்போதைய சூழநிலையில் இடம் பெயர்நத மககளின் மற்றும் மாணவரின் வசதி கருதி வட்டுக்கோட்டை, சங்கானை பாதைககூடான பஸ் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் தேவை ஏற்படின் மேலதிக சேவைகள வழங்க தாம் தயாராக இருப்பதாகவும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை செயலாற்று முகாமையாளர் சு.மணிவாசகர் தெரிவித்துள்ளார். (க-3)

### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை, கால்அவியல, சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபல மானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்தியகலாநிதி,
சி. இராசரத்தினம்,
121,
2 ஆம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்
2459

(1218)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 22 ஆம, 23 ஆம் திகதி வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின பதிவு இலக்கங்கள் பிரதேச செயலா ரீதியாகத் தரபபடுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 128936 ஏ | 128936 பி |
| 128936 சி | 128936 டி |
| 141230 ஏ | 141230 பி |
| 146956 ஏ | 146980 ஏ |
| 146980 பி | 146985 ஏ |
| 146985 பி | 146989 ஏ |
| 146989 பி | 147105 ஏ |
| 147105 பி | 147106 ஏ |
| 147133 ஏ | 147133 பி |
| 147154 ஏ | 147154 பி |
| 147181 ஏ | 147181 பி |
| 147181 சி | 147325 ஏ |

சாவகச்சேரி

140971 ஏ

யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 147724 ஏ | 147724 பி |
| 147724 சி | 140600 ஏ |
| 140600 பி | 4275 ஏ |
| 142751 பி | 142756 ஏ |
| 142900 ஏ | 142902 ஏ |
| 142902 பி | 142902 சி |
| 142902 டி | 4[illegible]06 ஏ |
| 143036 ஏ | 4[illegible]036 பி |
| 143140 ஏ | 143140 பி |
| 143151 ஏ | 143151 பி |
| 143152 ஏ | 143152 பி |
| 143152 சி | 144294 ஏ |
| 147728 ஏ | 147728 பி |
| 147728 சி | 147728 டி |
| 147737 ஏ | 147737 பி |
| 147743 ஏ | 147743 பி |
| 147750 ஏ | 147750 பி |
| 147762 ஏ | 147762 பி |
| 147762 சி | 147762 டி |
| 147797 ஏ | 147797 பி |
| 147830 ஏ | 147830 பி |
| 147830 சி | 147842 ஏ |
| 147842 பி | 147842 சி |
| 147844 ஏ | 147844 பி |
| 147844 சி | 147844 டி |
| 147849 ஏ | 147849 பி |
| 147849 சி | 147855 ஏ |
| 147855 பி | 147855 சி |

(தொடரும்)

## கண்ணீர் அஞ்சலி

வலி.தெற்கு பிரதேசசெயலக நெசவுக் கைத்தொழில் மேற்பார்வையாளராகிய
நகுலகுலசிங்கம் புஸ்பராணி
அவர்களின் பாசமிகு தாயார்,

### திருமதி அன்னம்மா சின்னத்துரை குருக்கள்

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக அனைத்து அலுவலர்களும்.
பிரதேச செயலகம்,
வலி தெற்கு, உடுவில்.

(1246)

## நெஞ்சை விட்டகலாத 2 - ஆம் ஆண்டு நினைவலைகள்

மீசாலை மேற்கைச் சேர்ந்த

### கதிர்த்தம்பி கந்தசாமி

(ஒய்வு பெற்ற மரக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

பிறப்பு:- 26-01-1927 இறப்பு:- 03-07-1998

திதி:- 26 - 06 - 2000

ஆண்டுகள் பல ஒடிமறைந்தாலும்
எங்கள் நெஞ்சம் என்றும் உங்களை மறக்காது

அன்புடன் நினைவு கூரும்

அன்பு மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள

தற்காலிக முகவரி:
சிவன் கோவிலடி,
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(சி/568)

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் பரமேஸ்வரன்

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் பரமேஸ்வரன் (ஐயர்) 21.06 2000 புதன்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

இவர் சிவக்கொழுந்து காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம ஆகியோரின் மகனும், கமலநாயகியின் கணவரும், பத்மாஜினி, கலைமகள சிவதர்சினி, சசிகலா, ஸ்ரீமயூரன் ஆகியோரின் தந்தையும். அகிலாண்டேஸ்வரி, இராஜேஸ்வரன் [சுவிஸ்], விக்னேஸ்வரி (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்), கிருபாகரன் (சுவிஸ்). ஆகியோரின் சகோதரனும் சோமசுந்தரம், (அளவெட்டி சதானந்த வித்தியாலய அதிபர்) கிருஸ்ணகுமாரி (சுவிஸ்), சிவராசாஐயர் (சுவிஸ்), நாகேஸ்வரி (சுவிஸ்), ஆகியோரின் மைத்துனரும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.06.2000ல் மட்டக்களப்பில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

சி. சிவக்கொழுந்து [தாயார்]
க. சோமசுந்தரம் (மைத்துனர்)

சிவகிரி
கோப்பாய்தெற்கு,
கோப்பாய்

(1275)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



மனிதனைத் தலை நிமிர்த்தும் அறிவுடைமை
உள்ளத்தின் உயர்ச்சி மேம்படும் தரம்

வலம்புரி

## தொண்டுள்ளங் கொள்வோம்

சங்கங்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள் சங்கைக்காக இருக்கக் கூடாது. சிலவற்றின் பெயர்ப்பலகைகள் தூசி படிந்திருக்கும். பலவற்றில் பெயர்ப்பட்டியல் அடங்கிய கடிதத்தலைப்புகள் சுய விளம்பரத்துக்காய் தூங்கிக் கொண்டிருக்கும். இவை இருந்தென்ன இல்லாதிருந்தென்ன. காலத்தின் தேவை புரியாதவர்கள், கடமைசெய்யத் தெரியாதவர்கள் நாட்டிற்குச் சுமையானவர்களே. நாணித்தலைகுனியவைப்பவர்களே.

பொடியன்கள்என்றால் பல கருத்திற் சிந்திக்கலாம். துடிப்போடு தடைகளைப் பொடி செய்து தியாக உள்ளத்தோடு உதவுகரம் நீட்டுவோரும் பொடியன்களே. பகைப் புலத்தைப்பொடிப்பொடியாக்குவோரும் பொடியன்களே. இங்கே நாம் மகிழ்வோடு காலத்தின் தேவைக்காய் கருணை காட்டிய பொடியன்களைக் குறிப்பிட விரும்புகிறோம்.

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட, வணிக முகாமைத்துவபீட ஒன்றியப் பொடியன்கள் செய்த தர்மச்செயல்பாராட்டப்பட வேண்டியதே. உயரப்புலம் மெதடிஸ்த பாடசாலை, கொக்குவில் ஆரம்பப்பாடசாலை, உயரப்புலம் தேவாலயம் ஆகியவற்றில் தங்கியுள்ளோருக்கு செய்த உதவி சிறிதெனினும் காலத்தாற் செய்தவை ஞாலத்திற்பெரிதே.

ஒன்று மட்டும் உண்மை. அந்த மண்ணின் கருணையுள்ளங்கள் விழித்துக் கொண்டிருக்கின்றன. கியூடெக் நிறுவனம் ஆங்காங்கு புரியும் அளப்பரிய சேவை பாராட்ட வேண்டியதே.

இவ்வாறேலயன் கழகத்தினர் புரியும் சேவையும் தேவையானதே. இலவச வைத்திய சேவைக்கு தன்னை அர்ப்பணித்த இலங்கைச்செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவு தலைவர் பாராட்டுக்குரியவர்.

போட்டி போட்டுக் கொண்டு துடிக்கும் இளமைகளும், அனுபவ உள்ளங்களும் சேவை மனப்பாங்கோடு விளங்குவது ஆறுதல் அளிக்கிறது. இன்னல்பட்டவர்களின் இதயச்சுமையைப்போக்க உழைக்கின்றவர்கள் இந்த மண்ணின் உண்மைப்பிரஜைகளே.

தொண்டுள்ளம் தொடரட்டும். துயர் துடைப்பு மலரட்டும். மக்கள் மனச் சுமை மடியட்டும். அகதி வாழ்வு தொலையட்டும்.

- அன்புடன் ஆசிரியர்

## ஓய்வூதியம் பெறுவோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலகம் மூலம் ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியாளரில் பதிவுசெய்யப்பட்ட ஓய்வூதியர்களின் ஆனிமாதத்திற்கான ஓய்வூதியம் பின்வரும் வங்கிகளின் மூலம் வழங்கப்படுகின்றது.

சாவகச்சேரி இலங்கை வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர் மண்பரிய இலங்கை வங்கிக் கிளையில் திங்கள், செவ்வாய்களிலும் ஏனைய தினங்களில் பருத்தித்துறை இலங்கை வங்கியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தேசியசேமிப்பு வங்கிமூலம் ஓய்வூதியம் பெறுவோர் சுன்னாகம், யாழ்ப்பாணக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

மக்கள் வங்கிமூலம் ஓய்வூதியம் பெறுவோர் பருத்தித்துறை, சுன்னாகம் கிளைகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெறும் தென்மராட்சியைச் சேர்ந்தோர் தாம் வசிக்கும் இடங்களில் மேற்படி வங்கிகள் மூலம் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம். எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-14)

## கோழிக்கு நோய்த்தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

இனிவரும் காலநிலைமாற்றத்தால் கோழிகள் அம்மை நோயின் தாக்கத்திற்குள்ளாகக்கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதனால் கோழி வளர்ப்பாளர்கள், யாழ். கால்நடை வைத்தியசாலையை அணுகி தங்களது கோழிகளுக்கு தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (தி)

## சொந்த நாட்டில் கடமையாற்றுக

மேற்கு நாடுகள் கவர்ச்சியானவைதான் அதிக ஊதியமும் கிடைக்கும். ஆனால் எங்கள் நாட்டுக்கு கடமையாற்றுவது அடிப்படையானவை என்பதை மறந்து விடக்கூடாது என்று சிங்கப்பூர் துணைப் பிரதர் லீசியன் கூறியுள்ளார். (து)

## தமிழ் மொழித்தின போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழித்தினப் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யா/இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமிழ் அறிவு வினாவிடைப் போட்டி, வில்லுப்பாட்டு, நாடகங்கள் தவிர்ந்த, ஏனைய நிகழ்ச்சிகள் ஏற்கனவே தரப்பட்ட சுற்று நிருபத்திற்கு அமைய குறிப்பிட்ட பிரிவுகளுக்கு நடைபெறும் என்று மேற்படி கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## யுனிசெவ் நிறுவன உதவி

[மானிப்பாய்]

யுனிசெவ் நிறுவனத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கென வழங்கப்பட்ட சமையல் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வாளி, பாய்என்பன யாழ். செயலகத் திட்டமிடல் பிரிவினரால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து அப்பிரிவில் தங்கியிருக்கும் மக்களுக்கு கடந்த புதன்கிழமை விநியோகிக்கப்பட்டது. (ஸி-120)

## தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு விஞ்ஞானப்பகுதியில அறிவை விருத்தி செய்ய கொழும்பிலிருந்து ரூபா 5000 பெறுமதியான நூல்களைத் தருவித்து அன்பளிப்புச் செய்ய தீர்மானித்துள்ளது. [சி]

## பெற்றோல் விநியோகம்

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச செயலக ஊழியர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கட்டுப்பாட்டு விலையில் பெற்றோல் விநியோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

தமது சொந்தப் பாவனையில மோட்டார் சைக்கிள் வைத்திருக்கும் ஊழியர்களுக்கே இவ்வாறு 5 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டுள்ளது. (உ-14)

## மீட்பு

(புலோலி)

கரவெட்டி கரணவாயிலுள்ள கமநலச் சேவைத் திணைக்கள விவசாயிகள் இணைப்பாற்று மண்டபத்திலிருந்து திருடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் மீட்கப்பட்டுள்ளது. திருடர்கள் அப் பகுதி கிராமசேவை அலுவலரின் அலுவலகப் பகுதியில் இந்நீர் இறைக்கும் இயந்திரத்தைக் கொண்டு வந்து போட்டிருந்ததாகவும், தகவல் கிடைத்த நெல்லியடிப் பொலிஸார் அதை மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படவுள்ளது (சி-52)

## பண்டித மணியின் பிறந்ததின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பிறந்ததின நிகழ்வு நாளை முற்பகல் 10 மணியளவில் யாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் ஆதரவில் நடைபெறும் இந்நிகழ்வில் இணுவிலூர் புலவர் வை. க. சிற்றம்பலம் இயற்றிய "பண்டிதமணி நான்மணி மாலை" பாடல்கள் அரங்கேற்றம் செய்யப்படவுள்ளது.

இத்தவேளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய "கம்பராமாயணக் காட்சிகள்" இரண்டாம் பாகம், அவரது நூற்றாண்டு நிறைவையொட்டி வெகு விரைவில் வெளியிடப்படவிருப்பதாக பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை காரியதரிசி ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தெரிவித்துள்ளார். (உ)

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மருத்துவபீட மாணவர் ஒன்றியம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் நடாத்தவுள்ள மாணவருக்கான கருத்தரங்கில்பரீட்சை அழுத்தங்களும்-எதிர் கொள்ளும் முறைகளும் எனும் விடயம் இடம்பெறும். [சி]

## சேவைநலன் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலய அதிபராகத் தொடர்ந்து பதினைந்து வருடங்கள் சீரிய பணியாற்றி ஓய்வு பெறும் திரு சு. முத்துக்குமாரசாமிக்கு நாளை செவ்வாய்க்கிழமை மேற்படி வித்தியாலயத்தில் சேவை நலன் பாராட்டு விழா நடைபெறவுள்ளது. [சி]

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப்பிரிவின் இசைத் துறைத் தலைவர்

**திரு. N. V. M. நவரத்தினம்**

அவர்கட்கு அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம் வழங்கப்பட்டமையை வாழ்த்துவோர்,

நிர்வாகிகள்
வீணாவேணு இன்ரிரியூட்,
வழக்கம்பரை வீதி,
தொல்புரம்,
சுழிபுரம்.

(1267)

## தற்காலிக இடமாற்றம்

இல. 40, பழைய பூங்கா வீதியில் இயங்கும்
Dr. S. அன்ரன் அவர்களின்
மெடிக்கல் கிளினிக் தினமும் 25-06-2000
மாலை 2 மணி தொடக்கம் 6 மணிவரை
ஆனைக்கோட்டை பழைய பொலிஸ் நிலையம் முன்பாக
இயங்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

(1261) தகவல்: Dr. S. அன்ரன்

## வாகன உரிமையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

பலாலி றோட் கோண்டாவில் சந்தியில் இயங்கி வந்த சிறிகாந்தா சேவிஸ்ஸ்ரேசன் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடை நிறுத்தப்பட்டிருந்தது. அதே இடத்தில் 28-6-2000 புதன்கிழமை மீண்டும் ஆரம்பாகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்.

(1268)

## அறிவித்தல்

மீண்டும் சுன்னாகத்தில்
**சிங்கர் கொம்ளெக்ஸ்**
என்னும் ஸ்தாபனம் இயங்குகின்றது.

எம்மிடம்:-

★ கறுப்பு, வெள்ளை தையல் இயந்திரங்கள், உதிரிப் பாகங்களையும் எம்மிடம் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

★ சகல விதமான தையல் இயந்திரங்களும் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

சிங்கர் கொம்ளெக்ஸ்
மத்திய பேருந்து நிலையத்துக்கு அருகாமை,
சுன்னாகம்.

(1262)

## 'சாயிபாபா' களஞ்சிய 'ஆத்மீக நூலகம்'

திறக்கும் நேரம்-:
காலை- 10.00-12 00 மணிவரை
கோவில் வீதி, நல்லூர்.
மாலை 1.-30-4. 00 மணிவரை
விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.

(1265)

## யா/ மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை

பருத்தித்துறை

பழைய மாணவர் சங்கம்

**ஆண்டுப் பொதுக்கூட்டம்**

இடம்:பாடசாலை மண்டபம்
காலம்: 30-6-2000 வெள்ளி பி.ப.2.00மணி
பழைய மாணவர், நலன் விரும்பிகள் யாவரும் தவறாது சமுகம் தரவும்.

திருமதி M. தம்பிராஜா
செயலாளர்,

திருமதி M.G.தவரட்ணம்
தலைவர்

(இ-567)

## நாளைய வலம்புரியில்

வடக்குக் கிழக்கு மாகாண பொதுச்சேவையின் கீழ் உள்ளூராட்சி திணைக்களங்களில் பாலர் பாடசாலைகளுக்கான ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புச்செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விபரமும், விண்ணப்பமும் நாளை வலம்புரியில் வெளிவரும்.

## இலங்கை - - -

இப்பேச்சு வார்த்தையின் போது, இலங்கையின், ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் இந்தியா முழுமையாக ஆதரிப்பதை உறுதிப்படுத்தப் பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## இராணுவத்தீர்வே - - -

நடத்தி வருவது ஆபத்தாகும் அத்துடன் இது நேரடியான இராணுவத் தலையீட்டுக்கே வழிவகுக்கும்.

இந்த நாட்டின் பெரும்பாலான சிங்கள பௌத்தமக்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி தீவிரத்தை ஒழிப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு அளித்தனர்.

நீங்கள் இவ்வாறு செய்தால் எங்களுடைய ஆசீர்வாதமும் ஆதரவும் உங்களுக்கு உண்டு என்றும் அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ]

## இலங்கையிலிருந்து - - -

இந்த தமிழ் அகதிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4)

## இடம்பெயர்ந்த - - -

முறை பற்றி தூதுக்குழுவிடம் அறிவித்துள்ளார்.

புதிய நடைமுறையின் பிரகாரம்;

ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு நாளுக்கு 10 வீட்டு உரிமையாளரை அனுமதிப்பதாகவும் அவர்கள் வீட்டு உரிமையாளர்கள் தான் என கிராம சேவகர் உறுதிப்படுத்த வேண்டும். இந்த ஒழுங்கில சகலரும் செல்லலாம் எனவும் இந்த நடைமுறை ஓரிரு தினங்களில் நடைமுறைக்கு வரும் எனவும் புளொட் அமைப்பின் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் தனபாலசிங்கம் தெரிவித்தார்.

ஆட்கள இல்லாத வீடுகளில் கதவுகள் எடுக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே இந் நடைமுறை கொண்டுவரப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குருநகர்ப் பகுதி மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதிப்பது தொடர்பாகவும் இரு தினங்களில் முடிவு தருவதாகவும் இராணுவ அதிகாரி புளொட் உறுப்பினரிடம் தெரிவித்தனர்.

இச் சந்திப்பில் தனபாலசிங்கத்துடன தொடர்பாளர் சுதாகரன் யாழ் மாநகரசபை உறுப்பினர் முகமட் வசீம் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ-ச)

## புலிகள் தரப்பில் - - -

(துரையப்பா மோகன்)
மட்டக்களப்பு
★ செல்வன
கமலசமூர்த்தி சதீஸ்மூர்த்தி
யாழ்ப்பாணம்
★ ஜெயமுருகன்/சயந்தன்
(கேசானந்தம் திவாகரன்)
கிளிநொச்சி
★ ரவிவண்ணன்
(குழந்தைவேல் மோகன்)
மட்டக்களப்பு
★ சிவச்சந்திரன்
(ஜெயசீலன் ஜெயகாந்தன்)
மட்டக்களப்பு
★ பிரியநேசன்
(சிவலிங்கம் கனகரெத்தினம்
மட்டக்களப்பு
★ வதனன்
(பரமு கருணாகரன்)
யாழ்ப்பாணம்

## கப்பல் - - -

யோகத்தர்களும் பயணம் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பயணிகளுள் 42பேருக்கும் பயணச்சீட்டு வழங்கப்படும் எனவும பருத்தித்துறையைச் சேர்ந்த 100 பயணிகளுமாக 350பயணிகள் இக்கப்பலில் பயணம செய்யவுள்ளனர். (வ-3)

## கொழுமபில் - - -

பட ... ளனர்.

வத்தளை சந்திக்கருகாமையில் அணமையில இடம் பெற்ற சைக்கிள் குண்டு வெடிப்பை அடுத்தே பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து தேடுதல நடவடிக்கையில ஈடுபட்டு வருகின்றனர். (வ)

## கொழும்பு - - -

கள்ளுய, வரும் படையினர் வீதிகளில் திடீர் சோதனைகள மேற்கொண்டு வருகின்றனர்.

கொழும்பிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் தினந்தோறும் சோதனை நடவடிக்கைகள மேற்கொள்ளப் படுமென கொழும்பு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர், போதிலியனகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை நீர்கொழும்பு வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் நடத்திய திடீர் தேடுதலில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# மரண அறிவித்தல்கள்

இணுவில் மேற்கைச் சேர்ந்த

## தம்பி-சிவேஸ்வரத்தம்பி (வரதன்)

(விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி யாழ்ப்பாணம்)
(இணுவில் கந்தசாமி கோயில் தொண்டர்)
25-06-2000 நேற்று காலமானார்

இவர் தம்பி, இரத்தினம் தம்பதிகளின் அருமை மகனும் லதாராணியின அன்புக் கணவரும் ஐயாத்துரை பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும, தம் பிரதகின சோதி குகன் அருளதம்பி (ஜேர்மனி) கேதீஸ்வரத்தம்பி (ஜேர்மனி), ஆகியோர்களின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன், இரவிச்சந்திரன (கொழும்பு), இந்திராணி, விபுலானந்தராசா ஆகியோரின மைத்துனரும் ஞானதுரை (ஆசிரியர் நியுஸிலாந்து) யின சகலனும தயாபரன், கிருபாநந்தி தயாநந்தி, கலைச்செல்வி, விவேகாநந்தி, மயூரானந்தி ஆகியோரின சிறிய தந்தையும், ஜெயபாரதி, துஸ்யந்தினி, சிவகஜன, உமாசுதன் முரளிகிருஷ்ணா, மிருணன், மிதுலா, நிதநிலா திருநந்தகுமார், ஸ்ரீகாநதன், உதயகுமார், காந்தகுமார், (நியுஸிலாந்து) ஆகியோரின் மாமனாரும் ஆவார். சிதம்பரா (கொழும்பு) பிருந்தாபூசணம (ஜேர்மனி) சம்ராஜினி (ஜேர்மனி), ஆகியோரின் மைத்துனரும சுவாங்கி, மாதங்கி, பார்த்தன், ஞாலதி, ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 26-06-2000 (திங்கட்கிழமை) இன்றுகாலை 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை காரைக்கால் இந்து மயானத்தில நடைபெறும் இத் தகவலை உற்றார்உறவினர்கள் நண்பர்கள் அனைவரும ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
லதாராணி (மனைவி)

லதா பவனம்
இணுவில மேற்கு,
இணுவில். (1273)

## சிவகுரு நாகரத்தினம்

(இளைப்பாறிய புகையிரத பிரதம பாதுகாவலர்)

சந்தை வீதி இமையாணன்உடுப்பிட்டியைச்சேர்ந்தவரும் காலஞ்சென்ற சிவகுரு தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல் வரும்,ஜெகதலஜெகசோதியின் அன்புக் கணவரும்,ஜெகத்குருதாஸ் [மருந்தாளர் அரசினர் வைத்தியசாலைமட்டக்களப்பு]Dr விமலகாந்தன் (போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) ஜெகன்மோகனதாஸ் (படவரைஞர் நீர்ப்பாசனத் திணைக்களம் (திருகோணமலை நாகநந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும்,புஸ்பவதி,உதயகுமாரிசாந்தினி ஆனந்தகுமார் J P.[ஆதாரவைத்தியசாலை பருத்தித் துறை]ஆகியோரின் அனபு மாமனாரும் ஆகிய சிவகுரு நாகரத்தினம் 24-6-2000 அன்று இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம், நாகம்மா குகப்பிரகாசம் காலஞ்சென்ற நாகேந்திரம் ஆனந்தராசா திருமதி இராஜலட்சுமி ஜெகநாதபிள்ளைஆகியோரின் அன்புச்சகோதரரும்.

ஹம்சா,திவ்யா,ஜயப்பிரதா,தனுஷன், திலக்ஷன் யுதர்சன் காலஞ்சென்ற கோவர்த்தனன் மோகனப்பிரியா,கீர்த்தனபபிரியா, பிரியதர்சனா, மதுசுதன் யலனப்பிரியா,ஆகியோரின் அன்புப்பேரனும், சிவசரவணபவ,சந்தனலட்சுமி,தனலட்சுமி,சிறிகாந்தன், லட்சுமிகுமாரி சந்திரமோகன்,கிருஷ்ணகுமாரி, நந்தகுமார் ஆகியோரின் பெரியதந்தையும், காலஞ்சென்ற தம்பையா அழகரத்தினம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-6-2000 திங்கட்கிழமை இன்று 11 மணியளவில் மேற்படி இல்லத்தில் நடைபெற்று வல்லை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்
Dr. N.விமலகாந்தன்.
(மகன்)

சந்தைவீதி,
உடுப்பிட்டி. [1272]

ரீகல்
மெகாதிரையில்
26-6-2000 முதல்
ஆரம்பம
பாட்ஷா
(நேரடி CDயில்)
10.30 - 2.30
மானிப்பாய் சந்தி,
மானிப்பாய்.
(1274)

நாகம்ஸ்
சுன்னாகம்
கார்த்திக், ரோஜா,
அஜித் நடித்த
இனிய பாடல்கள்நிறைந்த
உன்னிடத்தில்
என்னைக்
கொடுத்தேன்
(ரீல்ஸ்)
11.00, 2.30 [பு.நே]
(கி/462)

ஸ்ரீசெல்வா
யாழ்ப்பாணம்
கார்த்திக் மந்த்ரா
நடித்த
கண்ணன் வருவான்
10.30, 2.00[ப.நே)
(கி-499)

'ராஜா'
யாழ்ப்பாணம்
விஜய். மந்த்ரா
ரகுவரன் சுபலக்சுமி
நடித்த
லவ் டுடே
புதியநேரம்10-30 – 2-00
[கி/555]

புதிய வீடியோ CD
வெளியீடுகள்
பிரசாந் - தேவயாணி
★ அப்பு
சத்தியராஜ்-தேவயாணி
★ என்னம்மா கண்ணு
பிரமிட் CD
வெளியீடுகள்
★ கந்தா கடம்பா
கதிர்வேலா
★ கண்ணன்வருவான்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(கி-571)

இன்றைய வீடியோ
CD வெளியீடுகள
★ பிரசாந் தேவயாணி
நடித்த
அப்பு
★ சத்தியராஜ்
தேவயாணி நடித்த
என்னம்மா கண்ணு
(பிரதிகள் உடன் பெற்றுக் கொள்ளலாம்)
ஓடியோ CD
வெளியீடுகள்
1. அலைபுடன்
2. பூவே புயலே
3. பூப்பூக்கும் ஓசை
4. சுதந்திரமண்ணுக்கு
5. காதலே கேளாயோ
மற்றும் புதியவீடியோ CDக்கள் விற்பனைக்கு உண்டு
மூர்த்தி
வீடியோ சென்ரர்
மானிப்பாய்
T p 2884
[கி 570]

# மரண அறிவித்தல்

திருமதி

## லிடியா செல்லம்மா தியாகராஜா

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

அமரர் ஆர்.கே. தியாகராஜா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட லிடியா செல்லம்மா 23/06/2000 இல் அவுஸ்திரேலியாவில் இறை மகிமைக்குள் ஆறுதல் பிரவேசம் அடைந்தார்.

அன்னார் சாந்தி (அவுஸ்திரேலியா), நிர்மலா (அவுஸ்திரேலியா), Dr. ரஞ்சினி (அவுஸ்திரேலியா), அருட்கலாநிதி டானியல் தியாகராஜா, குணாளன் [UK], தயாளன் (அவுஸ்திரேலியா), Dr ஸ்டெலா மைதிலி [பல் வைத்தியர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை] ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருட்திரு. ஜோன் ஜெகசோதி [அவுஸ்திரேலியா], மகிழ்ராஜன் ராஜசேகரம் [அவுஸ்திரேலியா], ராஜ்குமார் (அவுஸ்திரேலியா), தயாளினி, வசந்தி (U.K), சகுந்தலா (அவுஸ்திரேலியா), அருட்திரு ஜெயக்குமார் மேதர் (சேகர கண்காணிப்புக்குரு மெதடிஸ்த திருச்சபை, பருத்தித்துறை, கட்டைவேலி சேகரம்) ஆகியோரின் மாமியாரும், தேவசேயன், தேவதர்ஷன், மேனகா, அர்ஜுனா, அருண், கீதாஞ்சலி, ஏஞ்சலீன், லூக், ஷரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும், மு.நாகலிங்கம், மு.சின்னத்தம்பி அமரர்களான மு. தம்பித்துரை (முன்னாள் பொதுச் செயலாளர் யாழ். Y M C.A), மு.கந்தசாமி, திருமதி பொன்னுசாமி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு புதன் 05-07-2000 அன்று அவுஸ்திரேலியாவில் (கன்பரா) நடைபெறும்.

தகவல்
Dr. ஸ்டெலா மைதிலி மேதர்

மெதடிஸ்த திருச்சபை
கட்டைவேலி
கரவெட்டி
[கி/56௧]

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ... பனத்தாரினால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது